பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 14 ஞாயிற்றுக்கிழமை 29.12.2024 கதிர் 052

# மாவையின் பதவி விலகலை உறுதிப்படுத்திய தமிழ் அரசு

## பதில் தலைவராக சிவஞானம் தெரிவு





தமிழ் அரசுக் கட்சியின்தலைவர் பதவியில்இருந்து மாவை சோனதி ராசாவிலகியதாக அறிவித்தகடிதத் தின் அடிப்படை யில் கட்சியின் செயலாளர் முன் னெடுத்தநடவடிக் கைகளைநேற்று ஏகமனதாக ஏற்று உறுதிப்படுத்தியது கட்சியின் மத்திய செயற்குழு. இதையடுத்து பதில் தலைவராக சிவஞானம் தெரிவு செய்யப்பட்டார். மாவை சேனாதிராசா கட்சியின் அரசியல் குழுத் தலைவராகத் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் கடந்த காலப் பின்னடைவுகளுக்கு அதன் உறுதியற்ற வளவளா தலைமைத்துவம் ஒரு காரணம். தலைமை என்பது உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டிய தருணங்களின்திடமாகமுடிவெடுத்து மக்களை வழிநடத்தவேண்டிய பொறுப்பு. நன்கு சிந்தித்து அந்த முடிவுகளைத் திறம்பட எடுத்தால் வரலாறு அந்தத் தலைவரைப் பாராட்டும். இல்லையேல்அவர் ☞ 2

## மன்மோகன் சிங்குக்கு நாமல் நேரில் அஞ்சலி

மறைந்த இந்திய முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கின் பூதவுடலுக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சநேரில்அஞ்சலிசெலுத்தியுள்ளார்.

இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் ☞ 2

## பெருந் தலைவர் பதவி மாவைக்குக் கிடையாது

### தெளிவுபடுத்தியது கட்சி

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராசா நியமிக்கப்படவில்லை அரசியல் குழுவின் தலைவராக மட்டுமே அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரைப் பெருந்தலைவராக்க முன்மொழிந்தபோதும், யாப்புக்கு முரணாக அதைச் செய்யவேண்டாம் என்பதால் அது கைவிடப்பட்டது என்று கட்சியின் பேச்சாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் ☞ 2

## அரியம் உட்பட உறுப்பினர்கள் பலரும் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து நீக்கம்

### மருத்துவர் சிவமோகன் இடைநிறுத்தம்

2024ஜனாதிபதித்தேர்தலில்போட்டியிட்ட அரியநேத்திரன் மற்றும் பொதுத் தேர்தலில் வேறுகட்சிகள்அல்லதுசுயேச்சைக்குழுக்கள் ஊடாகத் தேர்தலில் போட்டியிட்டவர்கள் அனைவரும் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்படுகின்றனர் என்று கட்சியின் பேச்சாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று அறிவித்தார். அத்துடன்மத்தியகுழுஉறுப்பினர்மருத்துவர் சிவமோகன் கட்சியிலிருந்து உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்என்றும்தேர்தலின் போது கட்சியின் வேட்பாளருக்கு எதிராக அவர் மேற்கொண்ட பரப்புரை குறித்து அவரிடம் விளக்கம் கேட்கப்படும் ☞ 7

## 3 மாதங்களில் மட்டும் 28 துப்பாக்கிச் சூடுகள்

கடந்த மூன்று மாதங்களில் 28 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ள நிலையில் அவற்றில் 16 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களால் நடத்தப்பட்டவை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணிபுத்திகமனதுங்கதெரிவித்துள்ளார். ☞ 7

## கடந்த இரண்டாண்டுகளில் மட்டுமே விலங்குகளால் ரூ. 55 மில். நட்டம்

### தேசிய விவசாயிகள் கூட்டமைப்பு தெரிவிப்பு

2022மற்றும்2023ஆம்ஆண்டுகளில் விலங்குகள் பயிர்ச்செய்கைக்கு 55.3 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய விவசாயிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

காட்டு விலங்குகள் ☞ 2

## அபிவிருத்திக் கண்ணோட்டத்துக்கு ஏற்ப தொழிற்படையை உருவாக்கவேண்டும்

### பிரதமர் ஹரிணி வலியுறுத்து

அரசின் அபிவிருத்திக் கண்ணோட்டத்திற்கமைய தேசிய மற்றும் உலகளாவிய தொழில் சந்தை தேவைகளை பூர்த்திசெய்வதற்கு தயாராகவுள்ள பயிற்சிபெற்ற தொழில் படையணியை கட்டியெழுப்புவதே நாட்டிற்கு தேவையானதென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 'டிப்ளோமா' பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் பதின்மூன்று பாடநெறிகளின் கீழ் டிப்ளோமாவை பூர்த்தி செய்த 761 இளைஞர் யுவதிகளுக்கு இதன்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக கலந்துக்கொண்டு உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி தெரிவித்ததாவது:

நாடும், தேசமும் முன்னேறுவதற்கு, சமூகமொன்று முன்னேறுவதற்கு பல்வேறு திறன்களைக் கொண்ட நபர்கள் அவசியம். நாட்டின் கல்வி முறையின் ஊடாக எவரும் பின்னடைவை சந்திக்காது, முன்னோக்கிச் செல்ல வேண்டுமென்பதே ஆளும்தரப்பின் இலக்காகும். எமது இளையோரை வேலைவாய்ப்புக்கு நேரடியாக பொருந்தக்கூடிய நபர்களாக மாற்றியமைக்கவேண்டும். அதேபோல் தொழில்முனைவோர் திறன் கொண்ட தொழிற் படையணியாக இருக்கவேண்டும். இதன்மூலம்தொழிற்சந்தைக்கும்இளையோர் சமூகத்திற்குமிடையே காணப்படும் திறன் முரண்பாட்டைக் குறைக்க முடியும்.

தொழிற்கல்வி, கைத்தொழில் கல்வி அல்லது தொழிற் சந்தைக்கு நேரடியாக தொடர்புபடும் பயிற்சி சந்தர்ப்பங்களை அதிகளவானோர் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பாடசாலையிலிருந்து ☞ 7

### நீதியமைச்சரின் கலாநிதி பட்டம்

## நாடாளுமன்ற பணியாளர்கள் 8 பேரிடம் சிஐடி விசாரணை

நீதியமைச்சர்சட்டத்தரணிஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்பாக நாடாளுமன்ற ணையத் தளத்தில் கலாநிதி என்ற பட்டம் சேர்க்கப்பட்டது குறித்து நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தின் 8 பணியாளர்களிடம் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளைமேற்கொண்டுள்ளது.

ஆளும்தரப்பின் அமைச்சர்கள் மற்றும்நாடாளுமன்றஉறுப்பினர்களின் கல்வித் தகைமை தொடர்பில் எழுந்த சர்ச்சையை அடுத்து சபாநாயகரான இருந்தவரான சப்புமல் ரன்வல பதவி விலகியிருந்தார். இதைத் தொடர்ந்து நீதி அமைச்சரின் பெயர் முன்பாகவும் கலாநிதி என்கிற பட்டம் நாடாளுமன்ற இணையத்தில் போடப்பட்டிருந்ததாகச் சர்ச்சை வெடித்தது.

நாடாளுமன்ற இணையத்தளத்தில் உறுப்பினர்களின்சுயவிவரங்கள் ☞ 7

## முறையற்ற சொத்துக் குவிப்பு பற்றி யோசித ராஜபக்சவிடம் விசாரணை

### ஜன. 3 முன்னிலையாக சிஐடி உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வரான யோஷித்த ராஜபக்சவை ஜனவரி 3 குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முறையற்ற சொத்து சேகரிப்பு விவகாரம் தொடர்பான விசாரணைக்கு முன்னிலையாகுமாறு யோசித்த ராஜபக்சவுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பிரதான பாதுகாப்பு அலுவலரான நெவில் வன்னியராச்சி வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னிலையாகியுள்ளார்.

குற்றப்புலனாய்வு பிரிவினர் நெவில் வன்னியராச்சியிடம் 4 மணித்தியாலங்கள் விசாரணைகளை மேற்கொண்டனர். முறையற்ற வகையில் சொத்துச் சேகரித்த விவகாரம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

## மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் வர்த்தகரும் லஞ்சக் குற்றச்சாட்டில் கைது

வர்த்தகர் ஒருவரிடமிருந்து 90 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் மாகாணசபைஉறுப்பினர்சலோஷன கமகேவும், வர்த்தகர் ஒருவரும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை பகுதியில் வைத்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால்பொறுப்பேற்கப்பட்ட ☞ 7

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தலைவராக இன்றிக் காணாமல் போவார். அந்த ஆளுமையை கடந்த ஒரு தசாப்தகாலமாக தமிழ் அரசுக் கட்சி இழந்திருந்தது. அதற்குக் கட்சித் தலைமை மட்டுமன்றி கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர்களும்கூட ஒரு காரணம்.

எந்தவொரு முடிவையும் தீர்க்கமாக வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று எடுத்து அதன் விளைவுகளைத் தமக்குச் சாதகமாக வளைத்துக்கொள்ளும் வழிவகை தெரியாமல் தானும் திணறி தமிழ் மக்களையும் திணறடித்த காரணத்தாலேயே கடந்த தேர்தல்களில் அது பல பின்னடைவுகளைச் சந்திக்கவேண்டி வந்தது. அந்தப் போக்கு இன்னமும் கட்சிக்குள் நீடிக்கின்றது என்பதையே நேற்றைய முடிவுகளும் காட்டின.

மாவை சேனாதிராசா கட்சிக்குப் பகிரங்கமாகத் துரோகம் செய்த ஒரு தலைவர். அவருக்கு கட்சிக்குள் யாரும் எத்தகைய முரண்பாடுகள் இருந்தாலும் அவர் அப்படிச் செய்திருக்கக்கூடாது. ஆனால் அவரோ பட்டவர்த்தனமாக, வெளிப்படையாக கட்சியை மக்களிடம் காட்டிக்கொடுத்தார். 2024 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக வவுனியாவில் மத்திய செயற்குழுவில் முடிவெடுத்துவிட்டு வரும் வழியில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் வேட்பாளரும் தனது கட்சியிலிருந்து பிரிந்து சென்று அந்தத் தேர்தலைக் கேட்டவருமான அரியநேத்திரனை ஆதரித்து கிளிநொச்சிப் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். மட்டுமல்ல ''உங்களைப் போல நானும் அரியநேத்திரனுக்குத்தான் வாக்களிப்பேன்'' என்று மக்களுக்கத் தெரிவித்தார்.

பின்னர் தனது முதல் வாக்கை கட்சிக்காக சஜித்துக்கும் இரண்டாவது வாக்கை வீடு தேடி வந்த ரணிலுக்கும் மூன்றாவது வாக்கை அரியநேத்திரனுக்கும் போட்டேன் என்று பகிரங்கமாகத் தெரிவித்தது எல்லாம் தனிக் கதை.

இப்படி கட்சியை மக்களிடம் காட்டிக்கொடுத்துவிட்டு, பொதுத் தேர்தலில் கட்சிக்குப் பகிரங்கமாகத் துரோகம் இழைத்தார். நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் தெரிவுக் கூட்டத்திற்குப் போய்விட்டு வந்துதான் கட்சியின் தலைமைப் பதவி உட்பட அனைத்துப் பதவிகளில் இருந்தும் விலகுகின்றேன் என்று அறிவித்தார். கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியைத் தவிர அனைத்துப் பதவிகளில் இருந்தும் வெளியேறுகின்றார் என்பதை பகிரங்கமாகவே ஊடகங்களிடம் உறுதிப்படுத்தினார். கட்சி ஆபத்தான வழிப் பயணத்தில் தீர்க்கமான ஒரு தருணத்தில் நின்று கொண்டிருந்தபோது அதனைக் கைவிட்டு ஓடித் துரோகம் செய்தார். அதுமட்டுமல்ல கட்சியிலிருந்து வெளியேறி தனியே போட்டியிட்டவர்களை ஆதரித்து அரவணைத்து அவர்களின் தேர்தல் அறிக்கையைப் பெற்றுக்கொண்டு அவற்றை ஊடங்களில் வெளியிடவும் அனுமதித்தார். அதுவும்போக அவரும் அவரது மகனும் எதிர்த் தரப்பில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் போட்டியிட்ட சம்மந்தியான சசிகலா ரவிராஜுக்கு ஆதரவு தேடித் தருவதிலும் மும்முரமாக இருந்தனர். இப்படிக் கட்சியில் யாருடனோ இருந்த கோபத்தை சண்டையை கட்சிக்குத் துரோகம் செய்வதன் மூலம் வெளிப்படுத்தி மக்களையும் கட்சியையும் நடுத்தெருவில் விட்டுவிட்டு ஓடிப்போன ஒருவரைக் கட்சியிலிருந்து நீக்குவதை விடுத்து அவருக்கு அரசியல் குழுத் தலைவர் பதவி கொடுத்து அழகு பார்த்திருக்கின்றது மத்திய செயற்குழு.

கட்சி, ஆட்சி என்று வருகின்றபோது காய்யத்தல் உவத்தலற்று நடக்க வேண்டியதும் அப்படி நடப்பதாக மக்களை நம்ப வைக்கவேண்டியதும் அரசியல் தலைமைகளின் தலையாய கடமை. ஆனால் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைக் குழுவிற்கு இந்த விடயத்தில் தற்துணிபு கிடையாது. அது இன்னமும் வளவளா கொளகொள என்றுதான் இழுத்தடித்துக் கொண்டிருக்கப் போகின்றது, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று தீர்க்கமான முடிவுகளை எடுக்கப்போவதில்லை என்பதை மாவையை அரசியல் குழுத் தலைவராக நிமயித்ததன் மூலம் கட்சி மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்தியிருக்கின்றது.

மாவை கட்சிக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்தாரோ அதே அளவிற்குத் துரோகத்தையும் செய்தார். கட்சி தனது உறுப்பினர்கள் அனைவரிடம் இருந்தும் நன்மையைத்தான் எதிர்பார்க்கின்றது. துரோகம் செய்வது மன்னிக்கப்படமுடியாதது. அதை எந்தவொரு உறுப்பினரிடமிருந்தும் கட்சி அனுமதிக்க முடியாது என்பதை மத்திய குழு உணருமானால் மட்டுமே கட்சி மீள் எழுச்சி பெற வாய்ப்பு உண்டு. மாவை விடயத்தில் அது தவறான முன்னுதாரணமாகவே முடிந்திருக்கிறது.

இதற்கு மேலும் மாவையை பெருந் தலைவராக்கவும் சிலர் துடிக்கின்றனர். நேற்றைய கூட்டத்தில் அவருக்கு கட்சியின் பெருந்தலைவர் என்கிற பதவி வழுங்கப்பட்டதாக செய்திகளும் வெளியாகின. ஆனால் அப்படி நடக்கவில்லை என்றே தெரிகிறது. 2014 யாழ்ப்பாணத்தில் நடந்த கட்சி மாநாட்டில் தலைமைப் பதவி மாவை சேனாதிராசவுக்கு வழங்கப்பட்ட பின்னர் பெருந்தலைவர் என்ற பதவி சம்பந்தருக்கு வழங்கப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், கூட்டமைப்பின் தலைமைப் பதவி இருந்த காரணத்தினாலோ என்னவோ சம்பந்தன் தமிழ் அரசின் பெருந்தலைவர் என்று அழைக்கப்பட்டதில்லை. கூட்டமைப்பு உடைந்து சிதறிய பின்னர் சம்பந்தனின் கடைசி ஒரு சில வருடங்களில்தான் அவரைக் கட்சியின் பெருந் தலைவர் என்கிற இடத்திற்கு தொண்டர்களும் ஊடகங்களும் உயர்த்தின. அதுவரை அவரை கட்சிக்குள்ளும் வெளியிலும் யாரும் பெருந்த தலைவர் என்று அழைத்ததில்லை. மாவையின் இயலாமை, ஆளுமையற்ற தன்மை என்பவற்றின் காரணமாகவே தமிழ் அரசின் அடையாளமாக சம்பந்தனை பெருந்தலைவராக வரித்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டது என்று நினைக்கின்றேன்.

ஆகமொத்தத்தில் பெருந்தலைவர் பதவியை கட்சி கொடுத்தாலும் அது மக்களால் அங்கீகரிக்கப்படுவதற்கு உண்மையான தகுதியை ஒருவர் கொண்டிருக்கவேண்டும். சம்பந்தர் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்கிற இடத்திலிருந்து இறங்கியபோதுதான் கட்சியின் பெருந்தலைவரானார். தலைவராக இருக்கும்போதே கட்சியைக் காட்டிக்கொடுத்த மாவை எப்படிப் பெருந்தலைவராக முடியும்?

................................

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கூட்டம் இன்று வவுனியாவில் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தபோதும் நாள் குறிக்காமல் பிற்போடப்பட்டுள்ளது. ரெலோவின் பொருளாளரான சுரேன் குருசாமியின் மாமியார் இறந்து போனதன் காரணத்தால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒருவேளை அடுத்த வார இறுதியில் அல்லது அதற்குப் பின்னரான ஒரு நாளில் கூட்டம் நடத்தப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் இந்தக் கூட்டணியின் ஆயுள் காலம் இன்னும் சில காலத்திற்கு சேடம் இழுத்துக்கொண்டிருக்கிறது.

இதற்கிடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளரகளைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கத்திடம், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கட்சியில் உள்ள ரெலோவும் புளொட்டும் மீண்டும் தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து செயற்படுவதற்கு அல்லது கூட்டணியில் உள்ள மற்றைய மூன்று தரப்புக்களையும் ஒதுக்கிவிட்டுத் தாம் இணைந்து செயற்படுவதற்கு முயற்சிப்பது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அப்படி ரெலோவும் புளொட்டும் செயற்படுமானால் தமது கட்சி தனித்துச் நிற்கும் என்றும் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு கிழக்கு முழுவதும் தமது கட்சி போட்டியிடும் என்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று தமது கட்சி நிர்வாகக் குழு கூடி ஆராய இருந்தது என்றும் தெரிவித்தார்.

.............................................

தமிழ் அரசுக் கட்சியின் பவளவிழா நிகழ்வுகளை மட்டக்களப்பில பெரும் எடுப்பில கொண்டாடுவது என்று கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுத் தீர்மானித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டக் குழுவின் சார்பில் விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கையை ஏற்று இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நிகழ்வுகளை நடத்தும் அதேநேரம் பெரு நிகழ்வை மட்டக்களப்பில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பவள விழாவையொட்டி மலர் ஒன்றும் பிரசுரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த மலர்க்குழுவிற்கு மாவை சேனாதிராசா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். விழாக் குழுவிற்கு சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## மாவையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் செயற்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

''மாவை சேனாதிராசா கட்சியின் அரசியல் குழுத் தலைவராக இருப்பார். இடைக்கால பதில் தலைவராக சிவஞானம் செயற்படுவார்'' என்று கட்சியின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளர் சிறீநேசன் தெரிவித்தார். கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்றுக் காலை இடம்பெற்ற பின்னர் மதியம் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் அறிவித்தார்.

''மத்திய குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் முதலாவதாக தலைவர் விடயம் குறித்துப் பேசப்பட்டது.

அடுத்த பொதுகுழு கூடி கட்சி மாநாடு நடக்கும் வரை இடைக்காலத்திற்குப் பதில் தலைவராக சிவஞானம் பணியாற்றுவார் எனவும் தலைவர் மாவை சேனாதிராசா அரசியல் குழுத் தலைவராகவும் செயற்பாடுவார் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மாவை சேனாதிராசா கட்சியின் பெரும் தலைவராக இருப்பார் என்றும் சொல்லப்பட்டது. அதேநேரம் அவ்வாறு கட்சியின் அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்டு பதவிகளை வழங்குவதில் அர்த்தமில்லை என்றும் சொல்லப்பட்டது.

வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவராக மாவை சேனாதிராசாவும் எஞ்சிய காலங்களுக்கான பதில் தலைவராக சிவஞானமும் செயற்படுவார்கள் என தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளதாக கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

''கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் பதவி விலகல் தொடர்பாக மத்திய குழுக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படுவதாக இருந்தது. இது தொடர்பாகப் பல வாதப்பிரதிவாதங்கள் இருந்தபோதும் 18 உறுப்பினர்கள் கையொப்பமிடப்பட்ட ஆவணம் ஒன்று சபைக்குக் கையளிக்கப்பட்டது.

மாவை சேனாதிராசா கட்சியின் நன்மை கருதி அவரது நற்பெயருக்கு களங்கம் இல்லாமல் தன்னுடைய பதவி விலகலை உறுதிப்படுத்தவேண்டும் என்று கேட்டு மத்திய குழுவின் 18 உறுப்பினர்களும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார்கள். கூட்டத்தில் அதற்கு எதிரான கருத்துக்களும் இருந்தன.

இறுதியில் கட்சி ஏகமனதாக ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கிறது. மாவை சேனாதிராசா கட்சியினுடைய அரசியல் குழுவின் தலைவராக தொடர்ந்து செயற்படுவார்.

கட்சியின் தலைவர் பதவி விலகினால் அந்த இடத்துக்கு இன்னொருவர் நியமிக்கப்படவேண்டும் என்று யாப்பிலும் சொல்லப்பட்டுள்ளது. அதற்கமைய எஞ்சிய காலத்துக்குப் பதில் தலைவராக கட்சியினுடைய மூத்த உபதலைவர் சிவஞானம் செயற்படுவார் என்று ஏகமனதாக வாக்கெடுப்பு இல்லாமல் பிளவுகள், பிரிவினைகள் இல்லாமல் முடிவு செய்யப்பட்டது.

இனிமேல் கட்சித் தலைவர் பதவியை சிவஞானம் வகிப்பார். அரசியல் குழுவின் தலைவராக மாவை செயற்படுவார். அரசியல் குழு என்பது மத்திய செயற்குழு சந்திக்க முடியாத தருணங்களில் கூடுகின்ற ஒரு குழு. அதுதான் வழமை. கடந்த காலங்களில் பல முக்கிய விடயங்களில் அரசியல் குழுவே தீர்மானம் எடுத்திருக்கிறது.

இதற்கு முன்னரும் இதுபோன்றே கட்சியின் அரசியல் குழுத் தலைவராக சம்பந்தனும் கட்சித் தலைவராக மாவை சேனாதிராசாவும் செயற்பட்டிருக்கின்றனர். அதன் அடிப்படையிலேதான் இப்போது மாவை சேனாதிராசாவிற்கு அரசியல் குழுத் தலைவர் பதவியை வழங்குவதற்குத் தீர்மானித்தோம்.

கட்சியின் மத்திய குழுவிற்குத் தடை விதிக்கக்கோரி யாழ்ப்பாணம் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் இதுவரை கட்டளைகள் எதும் வழங்கப்படவில்லை. எனவே அதுகுறித்து கருத்துத் தெரிவிப்பதற்கு இல்லை -என்று சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

## பெருந்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஒருவர் தனது பதவியில் இருந்து விலகுவதற்கு சுதந்திரம் இருக்கிறது. எனவே மாவை சேனாதிராசா தனது பதவியில் இருந்து விலகுவதற்கு முழு சுதந்திரம் இருந்தது. அதனை உபயோகித்து அவர் கடந்த ஒக்டோர்பர் மாதம் பதவி விலகுவதாக அறிவித்தார்.

கட்சியின் யாப்பின் பிரகாரம் ஒரு பதவி வெற்றிடமானால் அதனை நிரப்பவேண்டிய பொறுப்பு கடமை அதிகாரம் மத்திய செயற்குழுவிற்கே இருக்கிறது. அது இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தன்னுடைய நிலைப்பாட்டில் மாற்றம் இருப்பதாக சேனாதிராசா வாய்மொழி ஊடகவோ எழுத்து மூலமாகவோ அறிவிக்கவில்லை. அவர் அதனைத் தெரிவிப்பதற்குத் தேவையான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னரே கட்சி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று செயலாளர் அவருக்கு அறிவித்திருந்தார். ஆனால் அதற்குச் செயலாளர் பதிலளிக்கவில்லை.

இதேவேளை மாவை சேனாதிராசா கட்சியின் பெருந்தலைவராக நியமிக்கப்பட்டார் என்று செய்திகள் வந்துள்ளன. அரசியல் குழு தலைவராக சம்மந்தன் அவர்களை நியமித்தபோதும் பெருந்தலைவர் என்றே அழைத்தோம். அவ்வாறு மாவைசேனாதிராசாவை அழைப்போம் என நான் பிரேரித்திருந்தேன். ஆனால் யாப்பிலே அப்பிடி ஒரு பதவி இல்லை எனவே யாப்பின்படி நாங்கள் செல்லவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறியதன் காரணமாகவே பெருந் தலைவர் என்ற சொற்பதத்தை நாங்கள் உபயோகிக்கவில்லை.

இதேவேளை சிவஞானம் பதில் தலைவராக செயற்படுவார் என்பது ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானம். அதற்கு எவரும் மறுப்பு தெரிவிக்கவில்லை. அந்தத் தீர்மானத்திற்கு தான் இணங்கவில்லை என்றவாறான கருத்தைக் கூட்டத்தின் பின்னர் சிவமோகன் தெரிவித்திருந்தார். ஆனால் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தருணத்தில் அவர் கூட்டத்திலேயே இருந்தார் எதிர்ப்பு எதனையும் தெரிவிக்கவில்லை - என்றார்.

இதேவேளை, கட்சியின் தலைவரை நீக்கும் அதிகாரம் மத்திய செயற்குழுவிற்கு இல்லை. சேனாதிராசாவே தொடர்ந்து தலைவராக இருப்பார் என்று மருத்துவர் சிவமோகன் முன்னதாகத் தெரிவித்திருந்தார்.

''எமது கட்சி எப்போதும் தீர்மானங்களை எடுக்கும்போது அனைவரையும் சாப்பாட்டுக்குச் செல்லுமாறு தெரிவித்துவிட்டு எடுப்பதே வழமை. இன்றும் அதே நிலைமைதான் இடம்பெற்றது. இவ்வாறு தான் தேர்தல் நியமனக்குழுவுக்கும் இடம்பெற்றிருந்தது.

தற்போதைய செயலாளர் இருக்கும்போதுதான் இந்தக் கட்சியில் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. தலைவரை நீக்கும் அதிகாரம் இந்த மத்திய குழுவில் எவருக்குமே இல்லை. அதனை நான் நேரடியாக மத்திய குழுவுக்குத் தெரிவித்துவிட்டு கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கிறேன்'' - என்றும் தெரிவித்திருந்தார்.

தலைவரைப் பதவியில் இருந்து நீக்கவே முடியாது. நாங்கள் கேட்டுக்கொண்டது தலைவர் தலைவராகவே இருக்க பதில் தலைவர் கூட்டங்களை நடத்தட்டும் என்பதுதான். ஆனால், அவர்கள் மாறுபட்ட செய்தியை வெளியிடுகிறார்கள் -என்று மேலும் தெரிவித்திருந்தார்.

## மன்மோகன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைவையொட்டி அவரது குடும்பத்தாருக்கும், இந்தியர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளார்.

மன்மோகன் சிங் உடல் நலக் குறைவு காரணமாக டிசெம்பர் 26 காலமானார். அவரது பூதவுடலுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வெள்ளிக்கிழமை புதுடில்லிக்குச் சென்று நேரில் அஞ்சலி செலுத்தினார். பின்னர் இந்திய எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தியையும் சந்தித்துப் பேசினார்.

## கடந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 86.7 மில்லியன் தேங்காய்களை அழித்ததுள்ளன. இதன் மதிப்பு 5.2 பில்லியன் ரூபாவாகும், நாட்டின் 140,450 ஹெக்டெயர் பரப்பளவிலான மொத்த தேங்காய் விளைச்சலில் 17.5 சதவீதம் இவற்றால் பாதிப்படைந்துள்ளன என்று கூட்டமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

நெற்செய்கையில், 25 சதவீதமும் சோளச் செய்கையில் 11 சதவீதமும் காய்கறிகளில் 7 சதவீதமும் சேதமாக்கப்பட்டுள்ளன.

காட்டுப் பன்றிகள் மற்றும் குரங்குகள்

தொடர்ச்சி 7ம் பக்கம்....

# வடக்கு ஆளுநர் வேதநாயகனை சந்தித்த ஆசிரியர் சங்கத்தினர்





வடக்குமாகாணத்தில்கல்விப்புலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய இடமாற்றங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை வெள்ளிக்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

2017ஆம் ஆண்டு, வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏணைய 4 மாவட்டங்களுக்கும் முதல் நியமனம் கிடைத்த ஆசிரியர்கள், யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ள நிலையில் அந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விடயம் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

மேலும் கடந்த காலங்களில் இடம்பெற்ற விசாரணைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் அதில் தலையீடுகள் இருக்கின்றன எனவும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

பாடசாலைகளில் பரீட்சைக்கு மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவது தொடர்பில் கேள்வி எழுப்பிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், வேறு சில மாகாணங்கள் பரீட்சைக்கு நிதி ஒதுக்குகின்றமையை சுட்டிக்காட்டி அந்த நடைமுறையை பின்பற்றுமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

அதைச் சாதகமாகப் பரிசீலித்து நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயுமாறு கல்வி அமைச்சின் செயலருக்கு ஆளுநர் பணித்தார்.

மேலும், பாடசாலைகள் மற்றும் கல்விப்புலத்திலுள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆளுநருடன் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# மன்மோகன் சிங்கின் உடலுக்கு செந்தில் தொண்டமான் அஞ்சலி





இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் பூதவுடலுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

மேலும் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானின் இரங்கல் செய்தியில் -

மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மாத்திரமின்றி, இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு தூணாகத் திகழ்ந்தார். அதுமாத்திரமின்றி இலங்கை-இந்தியாஉறவைவலுப்படுத்த முன்னின்று செயற்பட்டார். குறிப்பாக 2010 ஆம் ஆண்டளவில் அவருடைய ஆட்சி காலத்தில் முதல் முறையாக இலங்கைக்கு இந்திய அரசால் இலவச வீட்டுத்திட்டம்வழங்கிவைக்கப்பட்டது.

மேலும், அக்காலப்பகுதியில் அவருடன் பலமுறை கலந்துரையாடல்களை மேற்கொண்ட போது, அவருடைய பொருளாதார திட்டங்கள் வியப்பளித்தன. அவர் அண்டைய நாடுகளின்பொருளாதாரவளர்ச்சியிலும் அக்கறைகொண்டவராகசெயற்பட்டார்.

அவருடைய ஆட்சியின் போது, இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை சேர்ந்த 46 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளும், மலையகத்தில் 4 ஆயிரம் தோட்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் வீடுகளையும் வழங்கி இலவச வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கத்தார். இவருடைய இழப்பு இந்திய மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பதோடு, இலங்கை ஒரு மிக முக்கியமான நண்பனை இழந்து இருப்பதாகவும் செந்தில்தொண்டமான் தெரிவித்தார்.

மேலும், இவருடைய இழப்பால்வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்தஅனுதாபத்தைதெரிவித்ததோடு, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோருக்கும் அனுதாபத்தை தெரிவித்தார்.

# பொத்துவில் மக்களை சந்தித்த தாஹிர் எம்.பி

(அபு அலா)





கடந்த பொதுத்தேர்தல் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் தனக்கும் வாக்களித்த மக்களுக்கு நன்றியை தெரிவித்து அம்மக்களின் தேவைகளை நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப்தாஹிர்கேட்டறிந்துகொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பொத்துவில் மத்திய குழுவின் தலைவரும் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின்பிரத்தியேகசெயளாலர் எஸ்.முஹம்மட் அலி ஜின்னா, பொத்துவில் நாடாளுமன்ற வேட்பாளரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான என்.எச்.முனாஸ், முன்னாள் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எம்.எம்.தாஜுதீன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பொத்துவில்இளைஞர் அமைப்பாளரும் சிரேஷ்ட உறுப்பினருமான ஹாலித் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அரச நிறுவனங்களை சைபர் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்கு விசேட புதிய திட்டம் அறிமுகம்

அரச நிறுவனங்களை சைபர் தாக்குதல் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்காக, அரச ஊழியர்களிடையே சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கானதிட்டங்களை இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு குழு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு குழு அறிவித்துள்ளதாவது -

அரசாங்க வலைத்தளங்கள் மற்றும் கணினி அமைப்புகளை குறிவைத்து நடத்தப்படும் சைபர் தாக்குதல்களால் ஏற்படும் தொடர்ச்சியான அபாயங்களைத் தவிர்க்க வேண்டியுள்ளது. அத்துடன் தாக்குதலுக்கு உள்ளான கட்டமைப்புகளை மீட்டெடுப்பது கணிசமான வருடாந்த செலவுகள் அதிகரிப்பதற்கு காரணமாகின்றது. இதனால் பொதுமக்கள் நிதி கணிசமாக வீணாகின்றது.

ஆகவே, அரச நிறுவனங்கள் முழுவதும் சைபர் பாதுகாப்பை வலுப்படுத்த ஒரு விரிவான உத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சம், அரச ஊழியர்களின் டிஜிற்றல் கல்வியறிவை மேம்படுத்துதல், சைபர் அச்சுறுத்தல்களை திறம்படக் குறைப்பதற்கான அறிவு மற்றும் திறன்களுடன் அவர்களைச் வலுவூட்டல் என்பனவாகும்.

பல்வேறு அரசதுறைகளுக்கான விழிப்புணர்வு அமர்வுகளுடன், இந்தத் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்குள் மேலும் பல நிறுவனங்களைச் சென்றடைய திட்டமிட்டு,இப்பயிற்சிமுயற்சிகளை மேலும் விரிவுபடுத்துவதை இத்திட்டம் கொண்டுள்ளது. - என்றுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீவிரமான நடவடிக்கை அவசியம்

**பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கடந்த சில நாள்களாக போக்குவரத்து காவல்துறையினர் எடுத்த நடவடிக்கையில் ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட போக்குவரத்து நடவடிக்கையின் போது, மதுபோதையில் வாகனம் செலுத்திய 383 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**குறித்த காலப்பகுதியில் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் 8,392 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

**போக்குவரத்து விதிகளை மீறியதற்காக 1382 சாரதிகள், அனுமதிப்பத்திரம் இல்லாமல் பயணித்த குற்றங்களுக்காக 690 சாரதிகள், அதிக வேகத்தில் பயணித்த 98 சாரதிகள் மற்றும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 59 சாரதிகளுக்கு எதிராகவே இவ்வாறு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்களை குறைப்பதற்காக பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக மார்கழி 23 முதல் இலங்கை முழுவதும் விசேட போக்குவரத்து நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து இவர்கள் எல்லோரும் கைது செய்யப்படிருக்கின்றார்கள்.**

**உலகில் விபத்துக்களில் அதிகளவானோர் உயிரிழக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. இந்த விபத்துக்களுக்கு மதுபோதையும் ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றது. மது அருந்தினால் தாம் வாகனம் ஒட்டக்கூடாது என்கிற தனி மனிதப் புரிதல் இங்கு மிகக் குறைவாகவே இருக்கின்றது. போதையிலும் தான் நிதானமாக வாகனம் செலுத்துவேன் என்பதைப் பெருமையாக நினைப்பவர்களே அதிகம் இருக்கின்றனர்.**

**மதுபானம் என்றல்ல எந்த வகையிலாயினும் ’அல்கஹோல்’ அருந்துபவர்கள் வாகனங்களைச் செலுத்துவதைத் தவிர்ப்பது கட்டாயமாக்கப்படவேண்டும். அவர்களின் வாகன சாரதி உரிமத்தை நீக்குவது உட்பட மிகக் கடுமையான நடவடிக்கைகள் மூலமே இந்தப் பண்பியல்பைக் கொண்டுவர முடியும்**

**எனவே பண்டிக்கைக் காலங்களில் மட்டுமல்ல ஏனைய நாள்களிலும் மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள் மீது மிகத் தீவிரமான நடவடிக்கையை காவல்துறையினர் மேற்கொள்வது அவசியம். இதன் மூலம் பல உயிர்களைக் காக்க முடியும்.**

**போக்குவரத்து விதிகளை மதித்துச் செயற்படுவதில் மிக மோசமான பண்பியல்லைக் கொண்டவர்கள் இலங்கையர்கள் என்பது வெளிப்படை உண்மை. இதற்கு போக்குவரத்து விதிமுறைகளை முழுமையாகவும் இறுக்கமாகவும் செயற்படுத்தாத காவல்துறையினரும் ஒரு காரணம். இதனை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவேண்டியது மிக அவசியம்.**

## வேட்டையனும்.. எ(வ்)லி தரும் வ(எ)லிக் காய்ச்சலும்....

*நாம் சிறுவர்களாக இருந்த 1960 காலங்களில் விஞ்ஞான பாடத்தில் பிளேக் நோய் பற்றிய ஒரு பாடம் நடத்தப்படுவதுண்டு.*

*இந்நோய் எலிகளால் அதிகம் ஏற்படுகின்றது என்பதாகக் கற்பிப்பர். கூடவே இதனை எவ்வாறு இல்லாது ஒழிக்கலாம் அல்லது மட்டுப்படுத்தலாம் என்பதாக எமது விஞ்ஞான ஆசிரியர் சுவாரிசமான கதை ஒன்றையும் கூறவார்.*

*விஞ்ஞான ஆசிரியையின் கற்பித்தல் திறனும் அழகும் அது உண்மை என்பதாக நாம் நம்பும் அளவிற்கான விடயங்கள் அதில் அடங்கி இருந்தன. இதற்கு வலுச்சேர்க்க ஆங்கிலக் கட்டுரை ஒன்றின் சில பகுதிகளை வாசித்து தமிழாக்கம் செய்தும் கூறுவார்.*

*அப்போது எல்லாம் மேல்நாடு என்று அதிகம் எம்மால் உணரப்பட்டது ஐரோப்பிய நாடுகள்தான். அதிலும் அதிகமாக இங்கிலாந்து என்பதாக எம்மால் அனுமானிக்கப்பட்டது.*

*நாம் ஒல்லாந்தர், போத்துக்கீசர் போன்றவர்களின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்தாலும் கல்வி அறிவை தமது காலனி ஆதிகத்தில் இருந்த காலத்தில் பாடசாலைகளை அமைத்து எமக்கு சகலரும் பெறும் வண்ணம் ஏற்படுத்தியவர்கள் என்பதுவும்.....*

*அதனூடு தமது மொழியான ஆங்கிலத்தை எம்மிடையே புகுத்தியவர்கள் என்பதும் இதற்கான முக்கிய காரணியாகவும் இருந்தாக என்றும் நான் உணரந்தும் கொண்டேன்.*

*இந்த எலியால் வரும் பிளேக்கை கட்டுப்படுத்த மருத்துவ விஞ்ஞானம் அதிகம் வளர்ச்சியடையாத அல்லது இந்த நோய்களுக்கு நேரடி மருந்துகள் கண்டுபிடிக்காத சூழலில் எவ்வாறு இந்த நோயைக் கட்டுப்படுத்துவது என்பதான சிந்தனையின் வெளிப்பாடாக அறிஞர்கள் சில யோசனைகளை முன் வைத்தனர்’*

*இது அனேகம் 19ஆம் நூற்றாண்டின் செயற்பாடுகளுக்குள் அடங்குவதாக உணரவும் முடிந்தது.*

*பிளேக் நோய் மனிதர்களுக்கு வருவதற்கு அதிகம் காரணமாக, மனிதர்களுக்கு அதிகம் அருகாக வாழும் வரும்... எலிகள் இருப்பதினாஅல் அவற்றின் நடமாட்டத்தை மட்டுப்படுத்தல், முடிந்தளவிற்கு அழித்தல் அல்லது மனிதர்களுக்கு அருகாக வராமல் தடுத்தல், மனித வாழ்விடங்களுக்கு அண்மையாக இருந்து துரத்துதல் என்பதற்கான வேட்டையனாக. எம்மோடு அதிகம் வாழும் பூனையை உதவிக்கு அழைத்தனர்.*

*அன்றைய காலகட்டத்தில் ஆண்கள் பொருள் தேடுவதற்காக வீட்டை விட்டு வெளியே செல்லுதல் என்பதாகவும் பெண்கள் பெரும்பாலும் குடும்பத்தை கவனிக்கும் செயற்பாட்டாளர்களாகவும் இருந்த சூழலில் பெண்கள் விரும்பும் செல்லப் பிராணியாக பூனையும் அதிகம் இருப்பதினால் பூனைகளை அதிகம் வளர்ப்பதற்குரிய ஊக்கத்தை பெண்களிடம் அதிகம் ஏற்படுத்தல் என்பதான பரப்புரைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.*

*இதன் மூலம் ’வேட்டையன்’ ஆல் எலிகளைக் கட்டுப்படுத்தும் வாய்புக்களை ஏற்படுத்தி பிளேக் என்னும் கறுப்பு நோயை மட்டுப்படுத்தி ஒழிப்பதற்கான வேலைத் திட்டங்களில் ஈடுபட்டனர்.*

*அன்றைய காலத்தில் பிளேக் நோயிற்கு உட்பட்வர்கள் அதிகளவில் உயிரிழந்தனர். அதன் தாக்கம் மெதுவாக உணரப்படும் வகையில் அமைந்ததினால், மனிதர்களின் அசட்டை, மருந்துகள் அதிகம் இன்மையினால் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. தீர்க்க முடியாத நோயாக அது இருந்தபடியால் கறுப்பு நோய் என்றனர்.*

*இன்றும் இந்த ’வேட்டையன்’ எமக்கு எலிகளை மனிதர்களின் வாழ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கு உதவிகரமாக இருக்கின்றான என்பதே இங்கு செய்தியாகி இருக்கின்றது.*

*கூடவே எமக்கு ஆபத்தை ஏற்படுத்தும் பாம்பு, ஓணான் போன்றவைகளும், எலிப் பொறிகளும் இந்த எலியைக் கட்டுப்படுத்த அதிகம் உதவுகின்றன.*

*என்ன அன்றைய காலகட்டத்தில் நாய், பூனை போன்ற வீட்டு மிருங்கள் செல்லப் பிராணியாக நாம் அரவணைத்தாலும் அவை எமது படுக்கையில் தமக்கான இடங்களை தேடாது. வீட்டுக் காவலையும் எலி விரட்டலையும் வேட்டையாடுதலையும் பாம்பு போன்ற விசஜந்துகளை மனிதர்களை அணுக முடியாமல் தடை செய்பவணவாகவும் செயலாற்றின.*

*இவை அதிகம் வீட்டிற்கு வெளியே வேட்டையாடும் மிருங்களாக வளர்க்கப்பட்டன. அதேநேரம் அவற்றின் மீது எம்மால் நிறையவே அன்பும் செலுத்தப்பட்டன.*

*அவை வருடம் முழுவதும் இரவு பகலாக வளவிற்குள் வேட்டையனாக வாழ்வதற்குரிய தட்ப வெப்ப நிலைகளை எம் தேசமும் கொண்டிருப்பதும் இங்கு கவனதில் வருகின்றது*

*தற்போயை நவீன வாழ்க்கை முறையில் இவற்றிற்கான உணவு உட்பட மருத்துவம் ஈறாக எல்லாம் கடைகளிலும் மருத்துவமனைகளிலும் என்றான நிலையில், அவற்றின் இயல்பான வேட்டையாடும் வாழ்க்கை முறையில் இருந்து அவற்றை அகற்றி வீட்டிற்குள் படுக்கையில் வாழும் ‘பயந்த’(அதிகம்) செல்லப் பிராணிகளாக நாம் மாற்றி விட்டத்தினால் இந்த ‘வேட்டையன்கள்’ எலிகளை விரட்டுவதில்லை. ஏனைய விச ஜந்துக்களையும் பரந்துபட்ட அளவில் விரட்டுவதற்கான வாய்புகள் குறைந்திருக்கின்றன.*

*இது பற்றிய விழிப்புணர்வு எம்மிடையே ஏற்பட்டாக வேண்டும்.*

*நோய்களுக்கான கிருமிகள் எலிகளிடம் இருந்து எம் செல்லப் பிராணிகளுக்கு தொற்றி அது எமக்கு தொற்றுவதற்குரிய வாய்ப்புகளையும் நாம் கருத்தில் கொண்டாக வேண்டும்.*

*கூடவே ‘எலி விரட்டி’ என்று பெயரிட்டு எனது கைப்பட எழுதி இங்கு கனடாவில் பாவிக்கப்படும், இயற்கை மரங்களில் இருந்து (அதிகம் இலைகளின் சாறுகளில் இருந்து) கிடைக்கும் நஞ்சுத் தன்மையற்ற மின்ட் (னிஷ்ஜமி) எலி விரட்டிகள் எலிகளைகள் வீட்டிற்குள் வருவதை தடுக்கும். இந்த மின்ட் அதிகம் தாயகத்தில் கிடைக்கும் பொருளாகவும் இருக்கும்.*

*உடைகளை பூச்சி அரிப்பதை தவிர்க்க பாவிக்கும் பூச்சிமுட்டை என்பது போல் இதனையும் நாம் பாவிக்கலாம்.*

*மழை அதிகம் பெய்வதினால், வெள்ளம் தேங்குவதினால் எலிகள் இயல்பாக வாழும் புதர்கள் பொந்துகளில் இருந்து வெளியேறி ஈரலிப்பு அற்ற வீடுகளுக்குள் புகுவதும் அவை தம்மை பாதுகாத்துக் கொள்ள அல்லது இரைபோல் தோன்றும் எமது உடல்களில் கடித்து வைப்பதும் அல்லது நாம் உண்ணும் உணவுப் தானியங்களுக்கு தமது விளையாட்டுக்களைக் காட்டி இந்த பிளேக் என்கின்ற எலிக் காய்ச்சல் அதிகம் பரவுவதற்கு ஏதுவான சூழ்நிலை ஏற்பட்டதன் வெளிப்பாடுதான் இந்த எலிக் காய்சலும் அதுசார்ந்த உயிரிழப்புகளும்.*

*இயற்கைச்சமநிலையைக்குழப்பியதினால் அது இப்போது எதுவரை மனித வாழ்வில் அவலங்களை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதையே இன்றைய எலிக் காய்ச்சல் பிரச்சினை எடுத்துக்காட்டுகின்றது. அதனை விரட்டுவதற்கு நாம் ’வேட்டையன்’ பூனைகளை மீண்டும் வீடுகளில் வளர்க்கவேண்டும்.*

*பூனைகளைக் கண்டதும் எலிகளுக்கு ”பூனைக்கு யார் மணி கட்டுவது?” என்ற*

தொடர்ச்சி 8ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் எம்.பிக்களை கௌரவிக்க கலந்தாய்வு

(ஹமீட்)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கான வரவேற்பு விழா தொடர்பான விசேட கூட்டம் அட்டாளைச்சேனை மத்திய குழுத் தலைவர் எஸ்.எல். ஹலீம் தலைமையில் அட்டாளைச்சேனை பிஃஏசிஎச் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.





இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமாகிய எம்.எஸ். உதுமாலெப்பை, சூறா கௌன்சிலின் செயலாளரும் கட்சியின் உச்ச பீட உறுப்பினருமாகிய அல்ஹாஜ் யு.எம். வாஹித் மற்றும் கட்சியின் உச்ச பீட உறுப்பினர்கள், வட்டாரத் தலைவர்கள், கட்சி கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி அன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் எம்.எஸ்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். உதுமாலெப்பை, நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம்.எஸ்.நளீம் ஆகியோருக்கான வரவேற்பு விழாவை சிறப்பாக நடாத்துவது எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உச்ச பீட உறுப்பினர்கள், நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அம்பாறை மாவட்ட கிராம மட்ட அமைப்பாளர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களையும் அழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## வவுனியாவில் நேற்று

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து சேகரிப்பு

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா தபால் நிலையம் முன்பாக இந்துப் இடம் பெற்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் புலிகளை மீள் உருவாக்கம் செய்யப்பட்டு எனதடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெற்றது. இதில் இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் மதத்தலைவர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (100)





முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## மனுஷவின் சகோதரன் அதிரடியாகக் கைது

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரனான திசர ஹிரோஷன நாணயக்கார குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று (சனிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவார் எனக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனுஷ நாணயக்காரவின் சகோதரன் மொனராகலை, பிபில பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நூல் வெளியீடு

இலங்கை சமாதான கட்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளரும், அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவருமான கலாநிதி எஸ். எல்.ரியாஸ் எழுதிய நூல் அறிமுகம் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட சாரணர் சங்கத்தின் ஆணையாளர் எம். ஐ. உதுமாலெப்பை தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் கலாநிதி றியாஸினால் கடந்த 20 ஆண்டுகளாக எழுதப்பட்ட நேர்முக பரீட்சையின் நுட்பங்கள் எனும் 40 நூல்களை அறிமுகம் செய்து வைத்து சங்கத்தின் உயர் சபையினருக்கு வழங்கி வைத்தார்.

## கோளாவில் விநாயகர் வித்தியாலய ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

(றிபாஸ்)

திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட கோளாவில் விநாயகர் வித்யாலயத்தில் 1993ஃ 94 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உயதாரம் கற்ற நண்பர்கள் ஒன்று கூடலும், ஆசிரியர் கௌரவிப்பும் பாடசாலையில் இடம்பெற்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தரும், ஏற்பாட்டுக் குழுவின் தலைவியுமான எஸ்.கலைமதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 'கற்றுத்தந்த ஆசிரியர் பெருந்தகைகளை பாராட்டி கௌரவித்தலும், கற்ற பாடசாலைக்கு மகுடம் சூட்டுதல் எனும் தொனிப்பொருளில் பலர் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

கோளாவில் விநாயகர் வித்தியாலயத்தில் கடந்த 35 வருடங்களாக ஆசிரியராகவிருந்து சேவையாற்றி ஓய்வு பெற்ற திருமதி சோம சுந்தரம், பத்து வருடங்களாக அதிபராகவிருந்த எஸ்.குணாளன் உட்பட பலர் இங்கு பராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் இசை நடன நிகழ்வு, கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.







BELLAGIO CASINO

**வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான அறிவித்தல்**

இல.430, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, கொழும்பு - 03 எனும் முகவரியில் அமையப் பெற்றுள்ள பெல்லாஜீயோ லிமிட்டட் (Bellagio Limited) நிறுவனம் பந்தையம், சூதாட்ட விளையாட்டுக்காக (கெசினோ) அமைக்கப்பெற்ற நிறுவனமாகும்.

பெல்லாஜீயோ லிமிட்டட் நிறுவனத்தில் பந்தையம், சூதாட்ட விளையாட்டு மட்டுமே இடம்பெறுவதோடு வேறு எந்தவித வர்த்தக நடவடிக்கைகளும் பணக்கொடுக்கல் வாங்கல்களும் நடைபெறுவதில்லை என்பதை இத்தால் தெரிவிக்கின்றோம்.

போலியான நபர்கள் பெல்லாஜீயோ லிமிட்டட் நிறுவனத்தின் பெயர் மற்றும் கணக்கு இலக்கத்தை பாவித்து செயற்படுத்தும் எந்தவொரு வர்த்தகம் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு பெல்லாஜீயோ லிமிட்டட் நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது என்பதோடு இவ்வாறான மோசடிக்காரர்களிடம் அகப்பட வேண்டாமென மேலும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகாமைத்துவம்
பெல்லாஜீயோ லிமிட்டட்

Casino Business (Regulation) Act, No 17 of 2010

BALLY'S CASINO SRI LANKA

**வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான அறிவித்தல்**

இல.34, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை , கொழும்பு - 10 எனும் முகவரியில் அமையப் பெற்றுள்ள பெலீஸ் லிமிட்டட் (Ballys Limited) நிறுவனம் பந்தையம், சூதாட்ட விளையாட்டுக்காக (கெசினோ) அமைக்கப்பெற்ற நிறுவனமாகும்.

பெலீஸ் லிமிட்டட் நிறுவனத்தில் பந்தையம், சூதாட்ட விளையாட்டு மட்டுமே இடம்பெறுவதோடு வேறு எந்தவித வர்த்தக நடவடிக்கைகளும் பணக்கொடுக்கல் வாங்கல்களும் நடைபெறுவதில்லை என்பதை இத்தால் தெரிவிக்கின்றோம்.

போலியான நபர்கள் பெலீஸ் லிமிட்டட் நிறுவனத்தின் பெயர் மற்றும் கணக்கு இலக்கத்தை பாவித்து செயற்படுத்தும் எந்தவொரு வர்த்தகம் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு பெலீஸ் லிமிட்டட் நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது என்பதோடு இவ்வாறான மோசடிக்காரர்களிடம் அகப்பட வேண்டாமென மேலும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமைத்துவம்
பெலீஸ் லிமிட்டட்

Casino Business (Regulation) Act, No 17 of 2010

காலைக்கதிர் Kalāikkathir

## கடந்த ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் 131 மில்லியன் கிலோ நெற் பயிர்களையும் 169 மில்லியன் கிலோ வாழைப் பழங்களையும், 6.8 மில்லியன் கிலோ சோளத்தையும் அழித்துள்ளன, அவற்றின் பெறுமதி முறையே 13.2 பில்லியன ரூபாய், 22.1 பில்லியன் ரூபாய் மற்றும் 10.3 பில்லியன் ரூபாய் ஆகும்.

ஒட்டுமொத்தமாக விலங்குகள் 59.7 மில்லியன் கிலோ காய்கறிகளையும் அழித்து 4.5 பில்லியன் ரூபாய் இழப்பை ஏற்படுத்தியுள்ளன. ஊவா மாகாணம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டடுள்ளதோடு அங்கு 45,000 ஹெக்டெயரில் பயிரிடப்பட்ட பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன. விவசாயப் பகுதிகளில்வனவிலங்குகளின்எண்ணிக்கை பெருமளவில் அதிகரிப்பதைக் குறைப்பதற்கு ஆளும்தரப்பு நவீன தொழில்நுட்பத்தைப் பின்பற்றவேண்டும் என்றார்.

## அரியம் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் தெரிவித்தார்

தமிழ் அரசுக் கட்சியின்மத்திய செயற்குழுக்கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று காலை 10 மணிக்கும் தொடங்கி பிற்பகல் வரை இடம்பெற்றது. காலை அமர்வில் கட்சித் தலைவர் விவகாரம் ஒரு முடிவுக்கு வந்த பின்னர் அது தொடர்பில் மதிய உணவு நேரத்தில் அறிவிக்கப்பட்டது. பின்னர் தொடர்ந்து நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மாலையில் சுமந்திரன் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியின் உறுப்பினரான மருத்துவர் சிவமோகன் மீது தேர்தல் காலங்களில் கட்சியினுடைய வேட்பாளர்களை நேரடியாக தாக்கி ஊடக சந்திப்புக்களை நடாத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தி விளக்கம் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரியநேத்திரன் ஏற்கனவே இடைநிறுத்தப்பட்டிருக்கிறார். அவரையும்கட்சியிலிருந்துவிலக்கலாம்என்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டிருந்தது.

அத்துடன் கடந்த தேர்தலில் கட்சிக்கு எதிரான வகையில் வேறு கட்சிகளோடு அல்லதுசுயேச்சைக்குழுக்களோடுஇணைந்து போட்டியிட்டவர்கள் அனைவரையும் உடனடியாக கட்சியில் இருந்து விலக்குவதாக மத்திய செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது. போட்டியிட்டவர்களின் பெயர்கள் எல்லாம் வர்த்தமானியில் உள்ளது. எனவே அவர்களிடம் விளக்கம் கோர வேண்டிய அவசியம் இல்லை.

அத்துடன் வேறுகட்சிகள் மற்றும் குழுக்களுக்காகப் பரப்புரை செய்தவர்கள் மற்றும் கட்சியின் முடிவுகளுக்கு மாறாக ஜனாதிபதி தேர்தலில் பிரச்சாரம் செய்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். சிலருக்கு எதிராக எடுக்கப்பட்டிருக்கிறது என்றார்.

## 3 மாதங்களில் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களால் நடத்தப்பட்டதாக்குதல்களில்10சம்பவங்கள்குறித்து 57 சந்தேகநபர்களை கைது செய்துள்ளதோடு மூன்று துப்பாக்கிகளை மீட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாதாள உலகக் குழுக்கள் ஒன்றுக்கொன்று அடிக்கடி மோதிக்கொள்கின்றன. அந்த மோதல்களின் தொடர்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

2023மற்றும்2024ஆம்ஆண்டுகளில்நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை ஒப்பிடும்போது, 2024இல் சிறியளவில் குறைந்துள்ளது.

2023ஆம் ஆண்டில் 120 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதோடு அவற்றில் 65 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்களால் நடத்தப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில், அந்த எண்ணிக்கை 99ஆக உள்ளது, இச்சம்பவங்களில் 55 குற்றக் கும்பல்கள் ஈடுபட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் வன்முறை குற்றச் செயல்களில் அதிகரிப்பு இருப்பதாக மக்கள் பேசுகிறார்கள். அதற்கு காரணம் குற்றங்கள் சம்பந்தமாக ஊடகங்களில் அதிகளவான செய்திகள் காணப்படுகின்றன. இருப்பினும், அந்தக் குற்றங்கள் அண்மைய காலத்தில் தீவிரமடைந்துள்ளதையஷஷளன என்பதை நாம் ஒப்புக் கொள்கின்றோம்.

2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தங்காலையில் ஐந்து பேர் கொல்லப்பட்டதையும், சில நாட்களுக்குப் பிறகு மல்வதுஹிரிபிட்டியவில் ஒரு பௌத்த தேரர் கொல்லப்பட்டதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஆயுதமேந்திய கும்பல்களுக்கு இடையே ஏராளமான வன்முறைகள் உள்ளன, அவர்கள் போதைப்பொருள் வியாபாரத்தில் அதிக பங்குகளுக்காகவும் தங்களது பகுதிகளை கட்டுப்படுத்துவதற்காகவும் ஒருவருக்கொருவர் போட்டியிடுகிறார்கள்.

பொலிஸார் அல்லது பாதுகாப்புப் படையினர் பெரியஅளவிலானசோதனைகளைமேற்கொள்ளும் போதெல்லாம், ஒரு போட்டிக் குழுவின் துப்பு அடிப்படையில் நாங்கள் செயற்படுகிறோம் என்று குற்றவியல் குழுக்கள் நினைக்கிறார்கள். எவ்வாறாயினும் சமீபத்திய வாரங்களில் நாங்கள் நிறைய போதைப்பொருட்களைக் கண்டுபிடித்துள்ளோம்,

இதேநேரம், பிணையில் விடுவிக்கப்பட்டதன் பின்னர் பிணை நிபந்தனைகளை தவிர்த்துவிட்டு தப்பியோடியிருந்த188பேர்மீதுஇன்டர்போல்சிவப்பு அறிவிப்புகளைப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களில் 63 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களைச்சேர்ந்தவர்களாக உள்ளனர் என்றார்.

## நாடாளுமன்ற....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்படும் பகுதியில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்பாக கலாநிதி என்ற பட்டம் பதிவிடப்பட்டிருந்தது. சபாநாயகரின் பட்ட சர்ச்சையை அடுத்து அது நீக்கப்பட்டது.

இது -தவறுதலாக நடந்த செயல் என்று நாடாளுமன்ற அதிகாரிகள் விளக்கமளித்ததுடன் அதற்காக மன்னிப்பும் கோரினர். எனினும்

இவ்விடயம் குறித்து நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார டிசெம்பர் 16 குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளித்தார்.

இந்த முறைப்பாட்டுக்கமை குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் டிசெம்பர் 22 நாடாளுமன்ற தொடர்பாடல்திணைக்களத்தின் பதில்பணிப்பாளர் உள்ளிட்ட 6 பேரிடம் வாக்குமூலம் பெற்றனர்.

வெள்ளிக்கிழமை மேலும் இருவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு, 3 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

## மாகாண ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிக்குரியஇழப்பீட்டைவிரைவாகப்பெற்றுத் தருவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று கூறியே இந்த இருவரும்90இலட்சம்ரூபாயைஇலஞ்சமாகப் பெற்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அபிவிருத்திக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாம் நிலை மட்டம் வரை இளைஞர் யுவதிகளுக்கு தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழில் திறன்களை பெற்றுக்கொடுப்பதற்கு எமது கொள்கை பிரகடனத்தின் ஊடாக நாம் திட்டங்களை வகுத்துள்ளோம்.

அனைத்துதொழிற்துறையும்மதிப்புக்குரியது. தாம் விரும்பும் எந்தவொரு தொழிற்துறையிலும் பிரவேசிக்கும் அனைவருக்கும் சமூகத்தில் முக்கியமான மற்றும் மதிப்புக்குரிய உறுப்பினர் என்ற உணர்வைக் கொண்டிருப்பதில் உறுதி இருக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்ட தொழிற்துறையில் அவர் அல்லது அவளுக்கு முன்னேற முடியுமென்ற நம்பிக்கையை உருவாக்குவதும் அவசியமானது.

எமது நாட்டிற்கு நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கு இலங்கையின் இளையோர் பரம்பரைக்கு சிறப்பான திறன்கள் உள்ளன. அதற்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்க தொழிற்துறை மற்றும் தொழில்நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்வது மிகவும் முக்கியமானது. விசேடமாக பயிற்சி மத்திய நிலையங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல், கொள்ளளவு அபிவிருத்திமூலம்பயிற்சியின்தரத்தைஅதிகரித்தல் மற்றும் தொழிற்துறை கல்வியில் இளைஞர்கள் பயணிக்கக்கூடிய வழிகளை உறுதிப்படுத்தல் மற்றும் உருவாக்குதல் அவசியமாகும்.

தொழிற்துறை மற்றும் கைத்தொழில் துறையில் இளைஞர் யுவதிகளுக்கு உயர் சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரசின் அபிவிருத்தி கண்ணோட்டத்திற்கமைய தேசிய மற்றும் உலகளாவிய தொழில் சந்தை தேவைகளை பூர்த்திசெய்வதற்கு தயாராகவுள்ள பயிற்சிப்பெற்ற தொழில் படையணியை கட்டியெழுப்புவதே நாட்டிற்கு தேவையானது -என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# வேட்டையனும்..

4ம் பக்கத் தொடர்ச்சி...........

என் பாடசாலை ஆசிரியர் செல்வரத்தினம் சொன்ன கதை ஞாபகத்தில் ஓடுவதையும் அதன் அழகிய நினைவுகளையும் தவிர்க்க முடியவில்லை.

**அறிவியல் தகவல்களுக்காக:**

பிளேக் நோய்த்தொற்று மிகவும் அரிதானது, ஆண்டுதோறும் சில ஆயிரம் பேர் மட்டுமே இந்த நிலையை உருவாக்குகிறார்கள். இருப்பினும், ஒருவர் சென்று வசிக்கும் இடங்கள், அதே போல் வேலை மற்றும் பொழுதுபோக்கு இடங்கள் அனைத்தும் பிளேக் நோய் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கலாம்.

பிளேக்கில் மூன்று வகைகள் உள்ளன:

1. கொடூரமான பிளேக்
2. செப்டிசிமிக் பிளேக்
3. நிமோனிக் பிளேக்

நிமோனிக்பிளேக்பாதிக்கப்பட்ட நீர்த்துளிகளைஉள்ளிழுப்பதன் மூலமோ அல்லது சிகிச்சை அளிக்கப்படாத புபோனிக் அல்லது செப்டிசிமிக் பிளேக் நுரையீரலுக்கு முன்னேறியதாலோ ஏற்படலாம். நிமோனியா சுவாச செயலிழப்பு மற்றும் அதிர்ச்சியை ஏற்படுத்தும்.

**தடுப்பு**

இதற்கு இன்னமும் நம்பகமான தடுப்பூசி இல்லை. ஆராய்ச்சிகள் இடம்பெறுகின்றன.

தனிநபர்கள் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது அது பாதிக்கப்படும் அபாயத்தில் இருந்தால், தொற்றுநோயைத் தடுக்க உதவும் மருந்துகள் பயன்பாட்டில் உள்ளன.

பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பிளேக் பிரச்சினையைத் தீர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்:

1. உங்கள் வீட்டில் விறகு குவியல்கள், பாறைகள், தூரிகை மற்றும் பிற கழிவுகள் உட்பட சாத்தியமான கூடு கட்டும் இடங்களை அகற்றவும். கொறித்துண்ணிகள் எளிதில் அணுகக்கூடிய இடங்களில் செல்ல பிராணிகளுக்கான உணவை விடக்கூடாது.

2. உங்கள் செல்லப் பிராணிகளை பிளைகள் இல்லாமல் வைத்திருங்கள். சிறந்த பிளே -கட்டுப்பாட்டுத் தயாரிப்புகளைப் பற்றி கால்நடை மருத்துவரிடம் கேளுங்கள்.

3. ஆபத்தான நுண்ணுயிரிகளுடன் தோல் தொடர்பைத் தவிர்ப்பதற்காக, பாதிக்கப்பட்ட விலங்குகளைக் கையாளும் போது கையுறைகளை அணியுங்கள்.

4. கொறித்துண்ணிகள் அதிகம் உள்ள இடங்களில் நேரத்தைச் செலவிடும்போது, குழந்தைகள் மற்றும் செல்லப் பிராணிகளைக் கண்காணியுங்கள்ம். பூச்சி விரட்டிகளையும் பயன்படுத்துங்கள்.

**சிகிச்சை**

பிளேக் ஒரு கொடிய நோயாக இருந்தாலும், வழக்கமாகக் கிடைக்கும் மருந்துகளால் அதற்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஒரு நோயாளி எவ்வளவு விரைவில் மருத்துவ உதவியை நாடி, தகுந்த பிளேக் சிகிச்சையைப் பெறுகிறாரோ, அவ்வளவுக்கு அவர்கள் முழுமையாக குணமடைவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

கடுமையான நோய்வாய்ப்பட்ட நிமோனிக் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கண்காணிப்பில் வைக்கப்படலாம். நெருங்கிய தொடர்பின் வகை மற்றும் நேரத்தைப் பொறுத்து தடுப்பு ஆண்டிபயாடிக் மருந்துகளும் கொடுக்கப்படலாம்.

புபோனிக் பிளேக், பிளாக் டெத் (யயிழிஉவ ம்ளழிமிஜ¬) என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது பீடித்த பெரும்பாலான நபர்கள் தங்கள் உயிரை இழந்துள்ளனர், மேலும் பலருக்கு குடலிறக்கத்தின்

# தமிழ்நாட்டின், தருமபுரம் ஆதீனம் திருக்கோணேச்சரத்தில் தரிசனம்

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான திருக்கோணேச்சரம் ஆலயத்துக்கு இந்தியா, தமிழ்நாடு, தருமபுர ஆதீன 27ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வெள்ளிக்கிழமை தரிசனம் செய்தார்.

இதன்போது வழிபாட்டில் ஈடுபட்டு பெருமானை தரிசித்ததுடன் பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்.



# தீவகத்தின் நிலைமைகளை ஆராய்ந்தனர் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்



தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா, லயன் ஜெயசந்திரமூர்த்தி றஜீவன் ஆகியோர் தீவகப் பகுதிகளுக்கு வெள்ளிக்கிழமை விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தனர்.

அனலைதீவு, மண்டைதீவு மற்றும் வேலணை ஆகிய தீவுகளுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அங்கு அரச அதிகாரிகள் மற்றும் மக்களோடு கலந்துரையாடி குறைபாடுகளைக் கேட்டு அறிந்தனர்.



அனலைதீவுக்கு விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒரு தொகை உலர் உணவுப் பொருள்களை வழங்கினர்.

பின்னர் அனலைதீவு மின்உற்பத்தி நிலைய மின் பிறப்பாக்கிகளை ஆராய்ந்ததோடு அனலைதீவு வைத்தியசாலைக்கும் விஜயம் மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து வேலணை மற்றும் மண்டைதீவுகளுக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், வைத்தியசாலைகளின் நிலைவரங்களை ஆராய்ந்தனர்





# பொலிஸ் அதிகாரியை தாக்கிய குற்றச்சாட்டில் ஏழு பேர் கைது

(பாறுக் ஷிஹான்)

விசாரணை மேற்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரியை குழுவாக இணைந்து தாக்கிய சந்தேக நபர்களை பெரியநீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறைமாவட்டம்பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதியில் இடம்பெற்ற இரு சாரார் முறுகல் தொடர்பில் வெள்ளிக்கிழமை விசாரணை மேற்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி மீது குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இத்தாக்குதலால் நிலைகுலைந்த குறித்த பொலிஸ் அதிகாரி காயமடைந்த நிலையில் மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத்தடுப்பு பிரிவில் கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு ஒன்று வழங்கப்பட்டிருந்தது. வழமை போன்று அம்முறைப்பாட்டை ஆராய இரு தரப்பினரை வரவழைத்த பொலிஸ் அதிகாரி விசாரணை விடயங்களை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

குறித்த விசாரணை பொலிஸ் அதிகாரி முன்னிலையில் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது முறைப்பாட்டாளர் பக்கமாக நின்ற பெண் திடிரென தனது செருப்பினை கழற்றி மறுமுனையில் இருந்த எதிராளியை நோக்கி பல முறை தாக்கியுள்ளார்.இதன் போது உடனடியாக செயற்பட்ட அப்பொலிஸ் அதிகாரி குறித்த தாக்குதலை நிறுத்துமாறு கோரி சமரசப்படுத்த முயற்சித்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸ் அதிகாரியை திடிரென குழுவாக இணைந்து பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்காக அழைக்கப்பட்டவர்கள் தாக்கியுள்ளனர்.

இதன் போது சற்றும் எதிர்பார்க்காத குறித்த பொலிஸ் அதிகாரி காயமடைந்த நிலையில் அருகில் உள்ள மருதமுனை பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக நேர்க்கப்பட்டார்.

மேலும் இத்தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில் பெண் மற்றும் ஆண் சந்தேக நபர்கள் 7 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கடமைக்கு இடையூறு செய்தமை சமாதானத்திற்கு குந்தகம் விளைவித்தமை வன்முறையை தூண்டியமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் எஞ்சிய சந்தேக நபர்களை கைது செய்ய பெரிய நீலாவணை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான பூரண விசாரணைகளை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக மேற்கொண்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியாவில் துப்பாகியுடன் இருவர் பொலிஸாரால் கைது

## பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள்

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் முன்னெடுத்தவிசேட நடவடிக்கையில்50 இற்கு மேற்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடையநபர்உட்பட இருவரை உள்நாட்டு துப்பாக்கி மற்றும் திருட்டு சம்பவங்களுக்கு பயன்படுத்தப்படும் என சந்தேகிக்கப்படும் இரு இயந்திரங்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.




வவுனியா நகர், பூவரசங்குளம், நெடுங்கேணி, ஓமந்தை, கனகராயன்குளம் என வவுனியா மாவட்டத்தின் பல பொலிஸ் பிரிவுகளிலும் ஏனைய மாவட்டங்களிலும் கத்தி முனைகளில் வீடுகளில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டமை என 50 இற்கு மேற்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர் தொடர்பில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சமந்த விஜசேகரவின் ஆலோசனையில், வவுனியாமாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் மலன் பெரேராவின் வழிநடத்தலில், வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சாரங்கராஜகுரு, பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்க, ரன்வெல, பொலிஸ் கொன்தாபிள்களான சிந்தக, விதுசன், சாரதியான திஸதாநாயக்க ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசேட நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.



இதன்போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பிரதான நபர் வீட்டில் தங்குவது இல்லை என்பதுடன் வனப்பகுதிகளிலேயே தங்குவதை வழமையாக கொண்டிருந்தார்.

இந்நிலையிலேயே வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் கீழ் 43 வயதுடைய குறித்த நபரை உள்நாட்டு துப்பாக்கி மற்றும் திருட்டு சம்பவங்களுக்கு பயன்படுத்தப்படும் என சந்தேகிக்கப்படும் இரு இயந்திரங்களுடன் கைது செய்துள்ளதுடன், அவருக்கு உதவியாக செயற்பட்டார் என சந்தேகிக்கப்படும் 30 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பிரதான நபருக்கு எதிராக நீதிமன்றில் நான்கு திறந்த பிடியாணை மற்றும் ஆறு திகதியிடப்பட்ட பிடியாணை என்பன இருப்பதுடன் அவர்களிடம் முன்னெடுக்கப்படுகின்ற மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட இருவரையும் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆயர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். 100




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# எப்போதுவேண்டுமானாலும் இடிந்து விழும் அபாயத்தில் பாடசாலை முகப்புக் கட்டடம்

## மாத்தளை நகரின் மத்தியில் அச்சத்துடன் பெற்றோர்



(மஸாஹிம்)

மாத்தளை நகர மத்தியில் அமைந்துள்ள இஸ்மாலியா முஸ்லிம் வித்தியாலயத்தின் முகப்புக்கட்டடம்எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழும் என்கிற அச்சத்துடனேயே பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டி இருக்கின்றது என்று பெற்றோர் குறைப் படுகின்றனர்.பாடசாலையின் முகப்புக் கட்டட சுவரில் ஏற்பட்டுள்ள நீண்ட பலத்த வெடிப்பே இதற்குக்காரணம் என்று அவர்கள் கூறுகின்றனர். இப்பயங்கர வெடிப்புகள் காரணமாக மேற்படி சுவர்கள் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்

1925ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இஸ்மாலியா வித்தி. இப்படசாலை மாத்தளை கொங்காவளை வீதிக்கும் மாத்தளை பிரதான வீதிக்கும் இடையில் அமைந்துள்ளது. பாடசாலையில் தரம் பதினொன்று வரையிலான வகுப்புகள் உள்ளன. சுமார் 265 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

அடுத்த ஆண்டு ஒரு நூற்றாண்டை எட்டும் இந்தப் பாடசாலை அதிக அக்கறை காட்டப்படாது புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. மாறி மாறி பல அரசியல் கட்சிகள் நாட்டை ஆண்ட போதும் இப்படசாலை அமைந்துள்ள மத்திய மாகாணத்தில் எத்துணை மாகாணசபைகள் ஆட்சி புரிந்த போதும் இதுவரை இப்பாடசாலையின் குறைகளையோ அடிப்படைத் தேவைகளையோ தீர்த்துவைக்க எவரும் முன்வரவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

நாட்டில் தற்போது நிலவுகின்றகடும்மழைமற்றும் சீரற்ற காலநிலைக் காரணமாக இந்துப்பாடசாலையின் சுவர் எப்போது வேண்டுமானாலும் இடிந்து பிள்ளைகள் மீது விழுமோ என்று அஞ்சிக்கொண்டே இருக்கவேண்டியிருக்கிறது என்று பொற்றோர் தெரிவித்தனர்.

இதனால் உயிர் ஆபத்துகள்கூட ஏற்படலாம் என அஞ்சும் பெற்றோர். இப்பாடசாலையின் ஆபத்தான நிலை பற்றி மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான கமகெதர திஸாநாயக்க மற்றும் மத்திய மாகாண கல்வி அமைச்சு மத்தியமாகாண ஆளுநர் ஆகியோர் அவசரமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

# மாத்தளை நகர பகுதியில் குரங்குகளால் தொல்லை

(மஸாஹிம்)

மாத்தளை நகரிலும் அதனை அண்மித்த பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் குரங்குகளின் நடமாட்டம் காரணமாக பொதுமக்கள் பெரும் இன்னல்களுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

குரங்குகளின் நடமாட்டம் காரணமாக தாம் அன்றாடம் பல இன்னல்களுக்கும் சிரமங்களுக்கும் ஆட்பட்டு வருகின்றனர் என்று பாடசாலை செல்லும் மாணவர்களும் பாதசாரிகளும் நகரில் அன்றாடம் அங்காடி வர்த்தகத்தில். ஈடுபட்டு வருவோரும் முறையிடுகின்றனர்.

வீதியோர மரங்களிலும் மின்கம்பங்களிலும் கூட்டமாகத்திரியும்குரங்குகளினால்பாடசாலை மாணவர்களும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு தொழிலுக்காக செல்வோரும் பெரும்பீதியுடன் பாதையில் பயணிக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதை ஓரங்களில் அங்காடி வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் தங்களின் மரக்கறி மற்றும் பழவகைகளை குரங்குகள் திடீரெனப் பாய்ந்து எடுத்துச் சென்று விடுகின்றனர் என்று வியாபாரிகள் முறையிடுகின்றனர்.

பாதை ஓரங்களில் நிறுத்தி வைக்கப்படுகின்ற.முச்சக்கரவண்டிகள் பாடசாலை பேருந்துகள் வான்கள் போன்றவற்றின் பக்கக் கண்ணாடிகளைக் குரங்குள் முறித்துச் செல்வதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

நகரில் குரங்குகளைக் கட்டுப்படுத் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவசர நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டுமெனப் பொதுமக்கள் வேண்டி நிற்கின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.12.2024இல் வெளியிடப்பெற்றது